வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 &
ISO 45001:2018 and ISPS compliant Port

Fax : 91-461-2352232
Email id : pro@vocport.gov.in
Website : www.vocport.gov.in

**Press Release No: 14** **Date: 22.08.2025**

**VOC Port Achieves First-Ever Export of 101 Windmill Blades in ship**

VOC Port has created a new milestone with the successful export of 101 windmill blades in a ship on 21.08.2025, marking the first time such a large number of blades has been shipped from the Port. This achievement surpasses the earlier record of 75 blades exported on 25.03.2025, setting a new benchmark in renewable energy cargo handling.

Through this significant export, the Port has achieved a total handling of 1,158 windmill blades up to August 21, 2025, in the current financial year 2025–26, registering a 5% increase over the 1,099 blades handled up to the month of August in the previous financial year 2024-25.

The blades, manufactured by Vestas, are being shipped to the United States through the vessel MV BBC Santiago. The shipment was handled at Additional Berth-I, where two harbour mobile cranes operated by Imcola along with vessel cranes ensured safe and efficient loading. Logistics support was provided by Maersk and Shore handling services by NTC Logistics, with M/s Marcons Ship Management Pvt. Ltd. serving as the Vessel Agent and Pearl Shipping & Chartering as the Stevedore.

Each blade measures approximately 59.18 metres in length, requiring specialized handling and dedicated storage arrangements. The Port has

specialized infrastructure including dedicated storage area of 1,00,000 square metres within the customs-notified area, for accommodating such over-dimensional cargo. Congestion-free road connectivity and the availability of a skilled workforce were also key enablers for this historic achievement.

Shri Rajesh Soundararajan, IAS, Deputy Chairperson, joined the senior officers of the Port in celebrating this achievement and extended his congratulations to all the stakeholders for their remarkable contribution to this success. Shri Susanta Kumar Purohit, IRSEE, Chairperson stated in his message that the successful handling and export of 101 windmill blades in a single ship reflects the Port's efficiency, capability, and commitment to supporting India's renewable energy mission.

The above details were furnished in a Press -Release by the V.O. Chidambaranar Port Authority today.

Public Relations Officer

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

SAGARMALA
Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 &
ISO 45001:2018 and ISPS compliant Port

Fax : 91-461-2352232
Email id : pro@vocport.gov.in
Website : www.vocport.gov.in

பத்திரிக்கை செய்தி :14 நாள்: 22.08.2025

**வ.உ.சி.துறைமுகம் ஒரே கப்பலில் 101 காற்றாலை இறகுகளை ஏற்றுமதி செய்து புதிய சாதனை படைத்துள்ளது.**

வ.உ.சி.துறைமுகம், 21.08.2025 அன்று ஒரே கப்பலில் 101 காற்றாலை இறகுகளை வெற்றிகரமாக ஏற்றுமதி செய்ததின் மூலம் புதிய சாதனை படைத்துள்ளது. துறைமுகத்திலிருந்து இத்தனை அதிக எண்ணிக்கையிலான காற்றாலை இறகுகள் ஒரே கப்பலில் ஏற்றுமதி செய்யப்பட்டது இதுவே முதல் முறையாகும். இந்த சாதனையின் மூலம் 25.03.2025 அன்று 75 காற்றாலை இறகுகள் ஏற்றுமதி செய்யப்பட்ட துறைமுகத்தின் முந்தைய சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சார்ந்த இயந்திர சரக்குக் கையாளுதலில், துறைமுகம் ஒரு புதிய முன்னேற்றக் கட்டத்தை அடைந்துள்ளது.

இந்த குறிப்பிடத்தக்க ஏற்றுமதி நிகழ்வின் மூலம் துறைமுகம் இந்த நிதியாண்டில் (2025-26) ஆகஸ்ட் 21- அன்று வரை 1,158 காற்றாலை இறகுகளை கையாண்டுள்ளது. இது இதற்கு முந்தைய நிதியாண்டின்(2024-25) ஆகஸ்ட் மாதம் வரை கையாளப்பட்ட 1,099 காற்றாலை இறகுகளை விட 5% அதிகமாகும்.

'வெஸ்டாஸ்' நிறுவனமத்தினால் மூலம் தயாரிக்கப்பட்ட இந்த காற்றாலை இறகுகள் 'MV BBC Santiago' என்ற கப்பலின் மூலம் அமெரிக்காவிற்கு ஐக்கிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த சரக்கு ஏற்றுமதி, கூடுதல் தளம்-1-ல் (Additional Berth-I) 'Imcola' நிறுவனம் மூலம் இயக்கப்படும் இரண்டு நகரும் பளுதூக்கி இயந்திரங்களின் (HMC) மூலமும், கப்பல் இயந்திரங்களின் மூலமும் பாதுகாப்பாகவும் திறமையாகவும் கையாளப்பட்டது.

இந்த காற்றாலை இறகுகளின் கடல் வழி போக்குவரத்திற்கான தேவையினை Maersk மற்றும் சாலை வழி போக்குவரத்திற்கான தேவையினை NTC நிறுவனங்கள் வழங்கின. கப்பல் முகவராக 'M/s Marcons Ship Management Pvt. Ltd.' மற்றும் காற்றாலை இறகுகளை ஏற்ற மற்றும் இறக்கும் பணிக்கான 'ஸ்டீவ்டோர்' (Stevedore)-ஆக 'Pearl Shipping & Chartering' நிறுவனமும் செயல்பட்டன.

ஒவ்வொரு காற்றாலை இறகும் சுமார் 59.18 மீட்டர் நீளம் கொண்டிருந்ததால் தனித்துவமான கையாளுமுறையும் சிறப்பான சரக்கு சேகரிக்கும் இட வசதியை வ.உ.சி.துறைமுகம் கொண்டுள்ளது. மேலும், இத்தகைய மிகப் பெரிய சரக்குகளை பாதுகாப்பான முறையில் சேமிப்பதற்கு வசதியாக துறைமுகத்திற்குள் சுமார் 1,00,000 சதுர மீட்டர் நிலப்பரப்பினை துறைமுகம் ஒதுக்கியுள்ளது. நெரிசல் இல்லாத சாலை போக்குவரத்து மற்றும் திறமையாள பணியாளர்கள் போன்றவையும் துறைமுகத்தின் இந்த வரலாற்றுமிக்க சாதனைக்குக் காரணங்களாக அமைந்தன.

திரு. ராஜேஷ் சௌந்தரராஜன், இ.ஆ.ப, துணைத் தலைவர், வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் அவர்கள் துறைமுகத்தின் மூத்த அதிகாரிகளுடன் இணைந்து இச்சாதனையைக் கொண்டாடிய நிகழ்வில், துறைமுகத்தின் அனைத்து பங்குதாரர்களையும் அவர்களது சிறப்பான பங்களிப்பிற்காக வாழ்த்தினார். மேலும் திரு. சுசாந்த குமார் புரோஹித், இ.ர.ப.மி.பொ., வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைவர், அவர்கள் தனது செய்திகுறிப்பில், ஒரே கப்பலில் 101 காற்றாலை இறகுகளை ஏற்றுமதி செய்த இந்த புதிய சாதனை துறைமுகத்தின் செயல்திறனையும், இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் இலக்கை ஆதரிக்கும் வ.உ.சி. துறைமுகத்தின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது என தெரிவித்தார்.

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி